யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# இலங்கைக்கு இராணுவ உதவி குறித்து அமெரிக்கா பரிசீலனை

(கொழும்பு)

இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்குவது குறித்து அமெரிக்கா தற்போது பரிசீலனை செய்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் மோதல்கள் ஏற்பட்டு ஒரு மாதத்துக்குள் இரு தரப்பிலும் 500க்கும் அதிகமானோர் இறந்துள்ளது குறித்து அமெரிக்கா தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 16 இதழ் 115
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30 - 5 - 1995

★ மட்டு. தரவைக்குளம்

## இராணுவ முகாம் தகர்ப்பில் 35படையினரை காணவில்லை

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவைக்குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கிய பின்பு, 35 இராணுவத்தினரை இதுவரை காணவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி தாக்குதல் பற்றிப் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவிக்கையில்; தரவைக்குளம் இராணுவ முகாமைத் தாக்கிய விடுதலைப் புலிகளுடன் இராணுவம் சுமார் 7 மணித்தியாலங்கள் போராடியதாகவும், இத்தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட உயிர்ச் சேதங்களும், காணாமற்போனவர்களின் விபரங்களும் இன்னும் சரியாக அறிவிக்கப்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. விரி

★ வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

# நீண்டகாலயுத்தத்தைத்தொடர அரசாங்கம் தீவிர நடவடிக்கை!

## - ஏவுகணை எதிர்ப்பு விமானங்களும் கொள்வனவு -

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நீண்ட யுத்தம் ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கமும் படையினரும் தீவிரமாக ஈடுபட்டுவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்தஏப்பிரல் 19-ம்திகதிக்குபின் இராணுவ தரப்பில் தொடர்ச்சியாக பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ள போதிலும் அரசதரப்பு நடவடிக்கைகளில் மந்த நிலையே காணப்படுகிறது.

அரசின் இந்த மந்த நிலை குறித்து சிங்கள இனவாதிகள் பெரும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நீண்ட யுத்தம் ஒன்றை நடத்துவது

(6ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பாரிய இராணுவ நடவடிக்கை

(மட்டு. நகர்)

மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ராணுவத்தினர்பாரியராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதாக தெரியவருகின்றது.

மட்டக்களப்பு நகர், கொக்கட்டிச்சோலை, கிரான் ஆகிய மூன்று இடங்களிலிருந்து படையினர் நடவடிக்கையை ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது. - ரி

## பேச்சுக்கான புதிய திட்டத்துடன் கனேடிய ராஜதந்திரி வருகிறார்

(கொழும்பு)

''அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் சீர்குலைந்து போன சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கான ஒருதிட்டத்துடன் கனடாவின் ஆசிய பசுபிக் பிராந்திய ராஜாங்க செயலாளர் பிரேமன்ஷான் இலங்கை வருகின்றார் என்று கனேடிய வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்;நாளை புதன்கிழமை

[6-ம் பக்கம் பார்க்க]

★ எல்லைக் கிராமங்களில்

## சிங்களப் பெண்கள் துப்பாக்கியுடன் காவல்

(கொழும்பு)

பொலநறுவ மட்டக்களப்பு எல்லைப்புற கிராமங்களில் சிங்களக்குடும்ப பெண்களுக்கும் சிறிலங்கா அரசு துப்பாக்கிகளை வழங்கியுள்ளது.

கிராமங்களின் எல்லைப் புறங்களில் இப் பெண்கள் துப்பாக்கியுடன் காவல் பணிகளில் ஈடுபட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பெண்களும் ஊர்காவல் படையில் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. - ரி

## சர்வதேச மத்தியஸ்தம் மூலம் அரசு - புலிகள் பேசவேண்டும்

(ஒஸ்லோ)

இலங்கைப் பிரச்சினையில் சர்வதேச மத்தியஸ்தம் தேவையென நோர்வே நாட்டு அகதிகளுக்கான கவுன்சிலின் (ஆசிய) இணைப்பாளர் திரு. நில்ஸ் ஸில்வஸ்ரேன் கூறியுள்ளார்

இலங்கைப் பிரச்சினையில் அரசுக்கும்- புலிகளுக்குமிடையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சர்வதேச மத்தியஸ்தம் அவசியமாகியுள்ளது. இப்பிரச்சினையில் இந்த பிராந்தியத்திலுள்ள அரசியல்வாதிகள் தலையிடவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்

இதேவேளை தற்போதைய நிலையில் இலங்கைப் பிரச்சினையில் மூன்றும் தரப்பு தலையிட்டு மத்தியஸ்தம் செய்யும் சாத்தியமில்லை என அவதானிகள் கூறியுள்ளனர். மேலும் இலங்கை அரசு சர்வதேச ரீதியில் மேற்கொள்ளும் ஆயுதக் கொள்வனவும் இலங்கையில் போர் மிகத் தீவிரமடைந்திருப்பதும் இதற்கு காரணமெனவும் கூறப்படுகிறது.-சி

● வெள்ளவத்தையில்

## துப்பாக்கிச் சூடு தமிழ் இளைஞர் பலி

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த இவ்விளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தப்பிவிட்டனராம்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆலய தாக்குதல்களைக் கண்டித்து யாழ். நகரில் எதிர்ப்பு நடவடிக்கை

### இந்து சமயப் பேரவை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இந்துக் கோயில்கள்மீதான சிறிலங்கா படையினரின் தாக்குதல்களைக் கண்டித்து மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை இந்துசமயப்பேரவை நடத்தவுள்ளது

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் முல்லைத்தீவு வற்றாப்பழை அம்மன் கோவில் ஆகியவற்றின் மீதான தாக்குதல்களின் தொடர்ச்சியாக கடந்த 17ம்திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முரு

(6-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்

தீவகப்பகுதி அராலித்துறை பகுதிகளில் நேற்று இரவு பலத்த வெடிச்சத்தங்களும், ஷெல் சத்தங்களும்தொடர்ச்சியாக கேட்ட வண்ணம் இருந்தன.

இதனால் கரையோரப்பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் மத்தியில் பெரும் பதட்டம் நிலவியது. 09-வி-ரி

## வரி விளம்பரம்

**2-6-95 சனிமாற்றம்**
ஆத்மஜோதி திரு நா. முத்தையா எழுதிய யோகர் சுவாமிகளின் தெய்வீக வரலாறும் அடங்கியது. ரூ 10/- விற்பனையாகின்றது. சுரேகா புத்தகநிலையம் யாழ்ப்பாணம் (சி-1494)

**வைத்தியம்**
செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

## விளையாட்டுப் போட்டி

(ஆனைப்பந்தி)
கார்த்திகா கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இல்லவிளையாட்டுப் போட்டி அண்மையில் நாவாந்துறை மைதானத்தில் நடைபெற்றது

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் தீவகக் கோட்டப் பொறுப்பாளர் செல்வி வினோ தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் நா. தர்மபாலன் பிரதம விருந்தினராகவும், மகளிர் அமைப்பின் அரசியற்பிரிவைச் சேர்ந்த திருமதி தமிழ்க்கவி தீவகக்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு: முகிலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் தீவக கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. ப கனகலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–05–30
செவ்வாய் இரவு

8-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
8-10 அறிந்துகொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்
8-20 நலந்தானு - ''செங்கண் மாரி நோய்'' பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
8-30 செய்திகள்
8-40 கருத்துக்களம்- இ.இராஜேஸ்வரன் எழுதிய ''தெளிவு பிறக்க வேண்டும்''
8-50 மலரும் மொட்டுக்கள்

1995–05–31
புதன் காலை
7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–05-30
செவ்வாய் மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 தமிழிசை
5-30 வானொலி மதியூகம்-22
6-00 சிந்தனைக்குச் சிலவினடிகள்
6-02 இவ்வாரம் இவர்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 என்தெரிவு
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்;

# கைதாகும் தமிழ் இளைஞர் பலர் காணாமலே போகிறார்களாம்

(கொழும்பு)
கொழும்பில் கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்கள் தெரியாத இடங்களிற்கு கொண்டு செல்லப்படுவதாகவும் பின்னர் அவர்கள் காணாமல் போவதாகவும் செய்திகள தெரிவிக்கின்றன.

இலக்கத்தகடு பொருத்தப்படாத வாகனங்களில் சிவிலுடைகளில் வரும் படையினா தமிழ் இளைஞர்களை திடீர் திடீரென கைதுசெய்கிறார்கள். கைது செய்யப்படும் இளைஞர்கள் கறுப்பு கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனங்களில் தெரியாத இடங்களிற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் பின்னா இவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி எதுவுமே தெரியவருவதில்லை.

இவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி பின்னர் எதுவுமே தெரியாது போய் விடுகிறதாம். இவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்களை தேடி அவர்களது பெற்றோர்கள் பொலிஸ் நிலையங்களுக்கும் படைமுகாம்களுக்கும் தினமும் செல்கின்றபோதும் கைது செய்யப்பட்டோர் பற்றிய தகவல்கள் எதுவும் அவர்களுக்கு கிடைப்பதில்லை.

இதேவேளை கொழும்பின் பல பகுதியிலும் தினமும் சுற்றி வளைப்புகளும் கைதுகளும் நடைபெற்று வருகிறது. கைதுசெய்யப்படுவோர் பெருமளவு பணத்தை கொடுத்தே விடுதலையாகும் சூழ் நிலை தோன்றியுள்ளது. பணத்தை குறியாகவைத்தே தமிழ் இளைஞர்கள் பெருமளவில் கைது செய்யப்படுகிறார்களாம். -சி

## சாவகச்சேரியில் விமான சிதைவுகள்

கொழும்புத்துறை)
தமிழீழ விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட விமானத்தின் பல சிதைந்த பாகங்கள் சாவகச்சேரிநகரில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. 154

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(அரியாலை)
வட்டுக்கோட்டை. சித்தன் கேணி, சங்கானை, பண்ணாகம் பகுதிகளில் நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இங்குள்ள கோவில்கள், பாடசாலைகள், பொதுமண்டபங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் நாய்கள், கட்டாக்காலியாக அலைந்து திரிகின்றன. 59

# கடற்படையை புனரமைக்க அரசு தீவிரமாக முயல்கிறது

(கொழும்பு)
கடற்புலிகள் அண்மையில் கடற்படை கப்பல்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களினால் அதிர்ச்சியும்மனத்தளர்வுமாக இருந்த இலங்கை கடற்படை தனது நிலையை ஸ்திரப்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கடற்புலிகளின் தாக்குதலை முறியடிக்கவென இலங்கை கடற்படையின் அதிகாரிகள் பலா 4 குழுக்களாக ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், சீனு ஆகிய நாடுகட்கு அனுப்பப்பட்டனர்.

இவர்கள் நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்ய இந் நாடுகட்கு விஜயம்செய்த போதும் அவர்கள் விரும்பிய ஆயுதங்கள் அந்நாடுகளில் இருப்பில் இல்லையாம். சில ஆயுத உபகரணங்கள் காலம் கடந்தவையாக இருந்தன. அவை புலிகளுக்கு சாதகமானதாக இருந்ததால் பெறப்படவில்லை.

வெளிநாடுகளுக்கு ஆயுத உபகரணங்களை கொள்வனவு செய்யச் சென்ற இந்த குழுக்கள் தற்போது நாடு திரும்பியுள்ளன. அவர்கள் என்னென்ன ஆயுத உபகரணங்களை கொள்வனவுக்கு 'ஓடர்' கொடுத்திருக்கிறார்கள் என்பது இனித்தான் வெளிவரும்.

போர்முனையில் ஈடுபட்டிருக்கும் கடறபடையினர் இந்த குழுக்கள் தங்களுக்கு வேண்டிய ஆயுதங்களுக்கு 'ஓடர்'' போட்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளனர். இந்த ஆயுதங்கள் கிடைக்கப்பெறின் கடற்படையினரின் உற்சாகம் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தகவல்களை ஜயதிலக என்பவர் ''சண்டே லீடரில்'' விரிவாக தெரிவித்துள்ளார். கே:சி

## புதிய இயக்குநர்சபை

(நெல்லியடி)
புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க புதிய இயக்குனர் சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தலைவராக திரு கி. சிவசுப்பிரமணிய தேவாவும், உப தலைவராக திரு. வ. சின்னத்தம்பியும், உறுப்பினர்களாக திருவாளர்கள் சி. அருமைத்துரை, க. நவரட்ணம், வ. சுந்தரலிங்கம், சு. கதிர்காமத்தம்பி, க. சோமசுந்தரம் ஆகியோரும் தெரிவானார்கள். 160

## முன்னாள் ஜனாதிபதி டி. பி. யை விசாரிக்க முடியவில்லை

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவை, தேர்தல் மோசடிகள் குறித்து விசாரணை செய்ய முடியாத நிலை தோன்றியிருப்பதாக அதற்கென நியமிக்கப்பட்ட சி. ஐ. டி. பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்தவருடம் இடம்பெற்ற தேர்தலில் பல மோசடிகள் இடம்பெற்றதாக கூறி இந்த சி. ஐ. டி. விசாரணைக் குழு கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக விசாரணை நடாத்தி வந்தது, இதில் இராணுவ பிராந்திய தளபதி, படை அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட 40 பேர் வரை விசாரிக்கப்பட்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின்படி இவர்களுக்கான உத்தரவுகள் அப்போதைய ஜனாதிபதி விஜயதுங்காவால் வழங்கப்பட்டிருந்தது. எனினும் திரு. விஜயதுங்க அனுபவிக்கும் சில சலுகைகள் காரணமாக அவரை விசாரணைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சி. ஐ. டி, பொலிஸார், பொலிஸ் மா அதிபரிடம் சமர்ப்பித்த அறிக்கையில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. -சி

# தாக்குதல் நடாத்த 5000 புலிகள் தயார்நிலையில்

[கொழும்பு]
யாழ் குடாவிலுள்ள இராணுவ முகாம்கள்மீது பாரிய தாக்குதல்களை தொடுக்க ஐயாயிரம் புலிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளதாக 'சண்டே லீடர்' கூறியுள்ளது,

யுத்தம் நடைபெறும் பகுதிகளில் புலிகள் பாரிய தாக்குதல்களை தொடுக்கலாம் என்று கிடைத்த தகவல்களை தொடர்ந்து படையினர் பூரண உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர், மட்டக்களப்பிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள ஆபித்திமலைப் பகுதியில் 2000 இற்கும்மேற்பட்ட புலிகள்ஆயுதப் பயிற்சி பெற்று வருகிறார்களாம.

இதேவேளை கிழக்கில் புலிகள் நடாத்தும் தாக்குதல்களில் அவர்கள் பெருமெடுப்பில் வந்து தாக்குவதாகவும் இதனால் முகாம்களிலுள்ள படையினருக்கு எதுவும் செய்யமுடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

## ஓய்வுபெற்றபடைஅதிகாரிகள் மீண்டும் சேவையில்

(கொழும்பு)
அரசியல் காரணங்களுக்காக அரசினால்ஓய்வுபெறுமாறு வலியுறுத்தப்பட்டு இளைப்பாறிய 12 இராணுவ உயர் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு மீண்டும் பதவியில சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களை மேஜர் ஜெனரல் தரத்திற்கு உயர்த்துவதற்காக பிரதி பாதுகாபபு அமைச்சர் செய்திருந்தசிபார்சை, அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இவர்களில் ஒருவரான கப்ரின் கீர்த்தி ஹூலன் கமுவ பிரதிபாதுகாப்பு அமைச்சரின் பிரத்தியேக உதவியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். கே-சி

## மருமகனின்உலக்கைஅடிக்கு இலக்கான மாமன் பலி

[நெல்லியடி]
மருமகனின் உலக்கை அடிக்கு இலக்காகிய அவரது மாமன் ஸ்தலத்தில் பலியானார். மருமகன் காவல்துறையினரால கைது செய்யப்பட்டார்.

இத் தாக்குதல் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் துன்னாலை மத்தியில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சந்திரசேகரம வல்லிபுரம் (வயது 70) என்னும் சோர் வாத நோயாளியே உலக்கை அடிக்கு இலக்காகி மரணமானவராவர். இவரை உலக்கையால் தாக்கிய இவரது மருமகனை பருத்தித்துறை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இம்மரணம் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்ட உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராசா கொலையெனத் தீர்ப்பளித்தார். 160 சி

## இராணுவத் தளபாடங்கள் ரஷ்யாவிலிருந்து வருகிறது

(கொழும்பு]
இலங்கைப் படையினருக்கு தேவையான பெருமளவு இராணுவ தளபாடங்கள் ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

ஆறு அன்ரோ நோவ் - 32 ரக விமானங்கள், 12 எம். ஐ 17 ரக ஹெலிகொப்டர்கள், ஆறு பீரங்கிப்படகுகள், 50 டாங்கிகள், 200 கவச வாகனங்கள் என்பன இலங்கைப்படையினருக்காக ரஷ்யாவிடம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இவ் இராணுவ தளபாடங்கள் அடுத்த ஆறு மாத காலத்தில் இலங்கைக்கு வந்து சேருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை வேறுபல நாடுகளிடமிருந்தும் பெருமளவு இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இவை மிகவிரைவில் இலங்கைக்கு வந்துசேருமென தெரிவிககப்படுகிறது.

இதேவேளை இஸ்ரேலிலிருந்து பெருமளவு ஆயுதங்கள கொழும்பு துறைமுகத்திற்கு அண்மையில் வந்து சேர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. சி

# சரத்பவார்சோனியா சந்தித்துப் பேச்சு

(புதுடில்லி)
ஆளும் இந்திரா காங்கிரஸிருந்து பிரிந்த அதிருப்தியாளர் குழு மூத்த தலைவரும் முன்னாள் மஹாராஷ்ர முதல்வருமான திரு. சரதபவார்நேற்று முன்தினம் திருமதி சோனியா காந்தியை சந்தித்து பேசியுள்ளார்.

இதன் மூலம் காங்கிரஸில் எதிர்ப்பு புயல் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. காங்கிரஸின் பிளவை சரிசெய்து

[5ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

வறுமை, வியாதி, கஷ்டங்கள் சிறைவாசம் மற்றும் உள்ள துன்பங்கள் எல்லாம் அவரவர்கள் செய்த பாவங்கள் என்ற மரத்தில் பழுக்கும் பழங்களாகும்.

- சாணக்கியநீதி.

## நமது நோக்கு

### மத உரிமை

"வரலாற்றுப் பெருமைமிக்க சந்நிதி ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தாக்குதல் காரணமாக பூசைகள் நிறுத்தப்பட்டுள்ளன?" என்பதை யாழ். இந்து சமயப் பேரவை யாழ். அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

இந்துக்களின் புனித ஸ்தலங்கள் சேதமாக்கப்படுவது, மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றான மத உரிமையில் கைவைப்பதாகும்.

முன்பு- இதே கோவில் சேதமாக்கப்பட்டதோடு, பெருஞ்செலவில் நிர்மாணிக்கப்பட்ட தேர் எரிக்கப்பட்டது.

இதற்குக் காலாயிருந்தவர்களிற் சிலரின் வாழ்க்கை காலாவதியாகிவிட்டது என்பதையே நாம் கண்டோம்.

தெய்வம் நின்றறுக்கும் என்பார்கள் ஆனால் அரசு இத்தகைய கொடுரங்கள் இழைப்பவர்களை இனம்கண்டு, கண்டித்துத் தடுக்கவேண்டும் என்பதே மக்கள் கோரிக்கை.

ஏற்கனவே- பலகோவில்கள், தேவாலயங்கள், எறிகணைகள், குண்டுவீச்சுகள் ஆகியவற்றால் சேதமாக்கப்பட்ட போதெல்லாம், அரசு கண்டும் காணாதது போலும் இருந்தது.

ஆனால்- கண்டனங்கள் வலுத்தபோது மழுப்பல் நியாயங்கள் கூறி, நட்டஈடுகள் தருவோம் என்று வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன.

எனினும்- மத உரிமை மீறல் தொடருவது வேதனைக்குரியதே.

இக்கோவிலில் அடியார்கள் மாத்திரமல்லாது, தீராத நோயாளிகள் இங்கு வந்து தங்கி நிவாரணம் பெற்றுச் செல்வதும் மனஅமைதி இழந்த பலர் நிம்மதிபெற்றுச் செல்வதும் சிறப்பான அம்சமாகும்.

இன்று- எறிகணை வீச்சினால் மடங்கள் சேதப்படுத்தப்பட்டதோடு, தங்கியிருந்த பல நோயாளிகளும் இடம்பெயரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா அரசின் கவனத்திற்கு மாத்திரமல்லாது, முழு உலகிற்கும் இத்தகைய மத விரோத நடவடிக்கைகள் அம்பலப்படுத்த வேண்டும்.

சிறீலங்கா அரசு பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதங்களுக்கு ஆதரவு தராவிட்டாலும் பரவாயில்லை; அழிக்கும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.

சகல மத நிறுவனங்களும் ஒரே குரலில் கண்டனம் தெரிவிப்பது அவசியம்!

# புலிகளின் விமானங்களைச் சந்திக்க கொழும்பு நகரில் ஏவுகணைகள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் ஜனாதிபதி சந்திரிகா தங்கும் அலரி மாளிகை, நாடாளுமன்ற கட்டிடம் உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் யாவற்றிலும் விமானஎதிர்ப்பு ஏவுகணை பொருத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப்புலிகள் விமானங்கள் மூலம் கொழும்பில் அலரி மாளிகை நாடாளுமன்றம் உட்பட பல பகுதிகளையும் தாக்கலாமென கிடைத்த தகவல்களையடுத்தே இவ்வாறு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் அண்மையில் ஆறு கிளைடர் ரக விமானங்களை கொள்வனவு செய்ததாகவும் இந்த விமானங்கள் குறுகிய இடைவெளியில் நிலத்திலிருந்து எழுந்து பறக்கக்கூடியன எனவும் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் புலிகள் தற்கொலைத்தாக்குதலை நடாத்தும் சாத்தியங்கள் உள்ளதாம்.

இதுபற்றி 'இந்து' பத்திரிகை தெரிவிக்கையில்: இவ்வாறான விமானங்களைக்கொள்வனவு செய்ய விடுதலைப் புலிகள் சில வருடங்களாக முயற்சி செய்து வந்தனர். தற்போது இவற்றை பிரான்ஸி

[5-ம் பக்கம் பார்க்க]

# ★ மட்டக்களப்பு தரவைக்குளத்தில் இராணுவத் திட்டம் தயாரிக்கும் படை முகாமே அழிக்கப்பட்டது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறப்புப்பணி குறித்துதிட்டமிடும் தரவைக்குளம் இராணுவ முகாம்மீதே விடுதலைப்புலிகள் பலத்த தாக்குதலை நடாத்தி அதனை அழித்துள்ளதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது.

தொப்பிகல காட்டுப் பகுதியிலேயே இந்த முகாம் அமைந்துள்ளது. தொப்பிகல பகுதியை சுற்றியுள்ள முகாம்களை சேர்ந்த படையினர் புலிகள் இம்முகாமைத் தகர்த்தபோது முகாமுக்கு உதவ முயன்ற போதும் புலிகளால் அது தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பல தாக்குதல்களுக்கான திட்டங்களும் ஒழுங்கமைப்புகளுமே இந்த தரவைக்குளம் முகாமிலேயே திட்டமிடப்பட்டு வந்துள்ளது. இம்முகாமை புலிகள் குறிவைத்தே தாக்கியிருப்பதாக படையினர் கருதுகின்றனர் என ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது.

இந்த முகாமின் முக்கியத்துவத்திற்கேற்ப முகாமிற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் முகாம் தாக்குதலுக்குள்ளான போது அங்கு 250க்கும் மேற்பட்ட படையினர் இருந்ததாகவும் இராணுவ தரப்பினர் கூறுகின்றனர்.

முகாமினுள் புகுந்து முகாமை புலிகள் அழித்துவிட்டதால் கொல்லப்பட்ட படையினரை தவிர ஏனையோர் காடுகளுக்குள் தப்பி ஓடிவிட்டதாகவே கருதப்படுகிறதாம். சி

# கொழும்பைத் தாக்கும் 'வதந்தி' ராணுவ தலைமையகத்திற்கு தினமும் 100 தொலைபேசி அழைப்புகள்

[கொழும்பு]

கொழும்பில் இராணுவ தலைமையகத்திற்கு தினமும் நூற்றுக்கும்மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ணமுள்ளதாகவும் போர் பற்றியும் போர்பற்றிய வதந்தியுமாகவே இந்த தொலைபேசி அழைப்புகள் இருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்: பெருமளவு தொலைபேசி அழைப்புகள் விடுதலைப் புலிகள் முக்கிய இடங்களில் தாக்குதல் நடாத்துகின்றார்களா என வினவியும், கொழும்பில் திடீர் திடீரென பரவும் வதந்திகளில் உண்மையிருக்கிறதா என வினவியுமே வருகின்றன.

இவ்வாறான அழைப்புகளை படித்தவர்கள் கூட எடுத்து 'பசாரில்' கதைக்கும் செய்திகள் பற்றி வினவுகிறார்கள் எமது படையினர் மோசமான எதிரியுடன் போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள் இதனால் தினமும் நாம் கேட்கும் ஒவ்வொன்றையும் நம்பக்கூடாது, வதந்திகளால்மக்கள் பரபரப்படைவதுடன் பயந்துவிடுகிறார்கள்.

சிலவேளைகளில் வெளிவரும் வதந்திகள் இரத்தத்தை உறைய வைப்பவையாகக்கூட இருக்கிறது. பின் இவை பொய் என்பது நிரூபணமாகிவிடுகிறது. ஏன் மக்கள் இவ்வாறு வதந்திகளை நம்புகிறார்களோ தெரியவில்லை எனவும் அங்கலாய்த்துள்ளார். சி

## பலதும் பத்தும்

### மக்னீசியம்

சராசரி மனித உடலில் 25 கிராம் மக்னீசியம் இருக்கிறதாம். இதில் 65சதவீதம் எலும்புகளிலேயே உள்ளது. நொதியங்கள் உருவாக இது உதவுகிறது.

உடல் உறுப்புகள் பலவற்றிற்கும் இரத்தம் முறையாக வழங்கப்பட, இரத்தக் குழாய்களை விரித்துவிடுவது மக்னீசியம். இதனால்.. இதயத்தைச் சீராக வைத்திருக்க, இரத்தக் குழாய்களில் தட்டணுக்கள் ஒரே இடத்தில் குவிந்து இரத்த ஓட்டத்தைத் தடைசெய்யாது பாதுகாக்க மக்னீசியம் அவசியம்.

இங்கிலாந்தில் லைசெஸ்ரர் (Leicester) பல்கலைக்கழக மருத்துவர் கே. எல். வுட்ஸ் செய்த ஆய்வில் மாரடைப்பைத் தடுக்க இது உதவுகிறது எனக் கண்டறிந்துள்ளார்.

முழுத் தானியங்களிலும், பால், தயிர், வாழைப்பழம் கரட், பச்சைக் காய்கறிகளில் இது தாராளமாகக் கிடைக்கிறது. தற்போது வாழைப்பழம்... மலிவுதான் என்பதை மறந்துவிடாதீர்கள்!

— மயூரன்

## இராசி பலன்

30-05-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு வைகாசி 16

பிரதமை பி. ப. 5-02 வரை ரோகிணி மு. ப. 10-09 வரை அமிர்தசித்தயோகம் இராகு காலம் பி. ப. 2-52 முதல்4 22 வரை; சுபவேளை காலை 10-22 முதல் 11-52 வரை

மேடம்; தொழில் மந்தம் வேலைக்கடுமை. மனச்சலிப்பு.

இடபம்: மேலதிகாரிகள் பரிவு, நற்பணி, சகோதர உதவி

மிதுனம்: குடும்பபற்றின்மை, காரியதாமதம், அலைச்சல்.

கடகம்- எதிர்ப்புக்களை சமாளித்தல், புதிய கடன், தெய்வீக சிந்தனை.

சிங்கம்: குடும்பசுகம் இனிய சம்பாஷணை, பாராட்டு,

கன்னி: காரணமற்ற கவலை, அமைதியின்மை, சுபவிரயம்.

துலாம்; வாக்குவாதம், பிறர் அவமானம், தொழில் நஷ்டம்.

விருச்சிகம்: கல்வியால் சிறப்பு, நண்பர் வருகை, புதியதெம்பு,

தனுசு: தொழில் மகிழ்ச்சி, எதிர்பாராத நன்மை, பயணம்

மகரம்: சகோதரி வன்மம், குடும்ப பகைமை. மனக்கவலை

கும்பம்: முயற்சித் தடை, அநாவசிய பயம், கோப வார்த்தை,

மீனம்: மகிழ்ட்டம், அறிஞர் உதவி, புதிய சிந்தனை.

— ஜோஸ்யர்

## நூல் வெளியீடு

[யழ்ப்பாணம்]

கல்வித் திணைக்களம் யாழ். வலயம் 2ன் ஆரம்பக்கல்வித்திறன்விருத்திச் செயற்திட்ட நூல்வெளியீடு இன்று செவ்வாய் பிற்பகல் 3.00மனிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

## சைக்கிள் திருட்டு

(அரியாலை)

அரியாலை தபாற்கட்டை சந்திக்கு சமீபமாக உள்ள கடை ஒன்றுக்கு முன்பாக புதிய ஏசியா சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளது.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து அரியாலையில் தங்கியுள்ள சவிரி ஆரோக்கியநாதன் என்பவருடைய சைக்கிளே கடந்த 19ம் திகதி காலை திருட்டுப் போயுள்ளது. -59

## வீதி நாடகம்

(அரியாலை)

யாழ் ஆஸ்பத்திரி வீதி மடம் வீதிச் சந்தியில் கடந்த 27ம் திகதி இரவு இன்றைய போர்க்காலத்தையொட்டிய வீதி நாடகமொன்றை புலிகளின் குரல் வானொலி கலைஞர்கள் அரங்கேற்றினார்கள். -59

# நாடாளுமன்றக் கட்டிடத்தைச் சுற்றி முழு உஷார் நிலையில் படையினர்

(கொழும்பு)

கோட்டையில் அமைந்துள்ள நாடாளுமன்ற கட்டிடத்தைச் சுற்றி பாதுகாப்பு முழு உசார் படுத்தப்பட்டிருப்பதுடன் புலிகளின் தாக்குதல் ஒன்றை தடுப்பதற்காக உதவுமாறு பொதுமக்களுக்கு படையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பகுதி மக்களிடம் பொல்சார், அந்நியரின் நடமாட்டங்களை கண்காணிக்குமாறும் கைவிடப்பட்டிருக்கும் நிலையில் அல்லது நிற்பாட்டப்பட்டிருக்கும் வாகனங்களை, கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் எலக்ரோனிக் உபகரணங்களை, தூரத்திலிருந்து இயக்கும் விமானங்களையும், படகுகளையும் மற்றும் நாடாளுமன்ற விளையாட்டு மைதானத்தில் காணப்படும் உல்லாசப் பயணிகள், விளையாட்டு வீரரை கண்காணிக்குமாறும் கோரிக்கை விடுத்

(4ம் பக்கம் பார்க்க)

# இராணுவ கட்டமைப்பில் மாற்றம் படை அதிகாரிகள் போர்க்கொடி

(கொழும்பு)

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையினால் கடந்தவாரம் இராணுவ கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்கள் இராணுவத்தினரிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகசண்டே லீடர்' செய்தி வெளியிட்டுள்ளது.

தாங்கள் இந்த மாற்றங்கள் குறித்து பலத்த எதிர்ப்பை தெரிவித்தபோதும் சில இயலாதகட்டளைகளைக்கூட செய்யுமாறு உத்தரவு தரப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்

[4-ம் பக்கம் பார்க்க]

# யாழ். குடாநாடு தாக்கப்படுமானல் மற்ருெரு பொஸ்னியா உருவாகும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதானத் திட்டத்திற்கு இராணுவம் உதவிசெய்யவேண்டும். விடுதலைப் புலிகள் அதற்குத் தடையாக இருக்கிருர்கள் அவர்களை முறியடித்து இராணுவம் வெற்றிகொள்ளவேண்டும் என்பதே பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேர்ணல் ரத்வத்தையின் திட்டமாகும் என 'சண்டே ரைபஸ்' பாதுகாப்பு செய்தியாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் அதில் தெரிவித்திருப்பதாவது:

யாழ்ப்பாணத்தை குறுகிய இடைவெளியில் கைப்பற்றுவது என்பது சுலபமானதல்ல என மேஜர் ஜெனரல் செனவிரத்ன தெரிவித்திருந்தார். ஆனல் கேர்ணல் ரத்வத்த அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை.

அண்மையில் அனுராதபுரத்தில் நடந்த பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் கூட்டத்தில் இந்த அலசல்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தை வெறுமனே சுலபமாக கைப்பற்ற இயலாதென வேறு பல அதிகாரிகளும் தெரிவித்தனர். யாழ் மீது கடல் தரை வழியாக ஒரு தாக்குதலை மேற்கொண்டால் அது மற்ருெரு பொஸ்னியாவாக உருவெடுக்கும். இங்கே காடுவழியே சண்டையிடுவது போலல்லாமல் நகரங்களிலும் போர் ஏற்படும். ஒரு பங்கரிலிருந்து ஒரு பங்கருக்கு மாறி போரிடுவது போலல்லாமல் கட்டிடத்திற்கு கட்டிடமாக நின்று போர்புரிய நேரிடும்.

இதனுல் பொதுமக்கள் வாழும் பகுதிக்கு சண்டை பரவுவதால்இறப்போர் காயப்படுவோர் தொகை எண்ணிலடங்காததாக அதிகரிக்கும்.

விமானப்போக்கு வரத்தும், கடற்படையின் போக்குவரத்தும் தற்போது முறிவடைந்த நிலையிலுள்ளது. இந்நிலையில் காயமடைவோரை அப்புறப்படுத்துவதும் முடியாத காரியம். ஆகவே அந்த இராணுவ அதிகாரிகளின் கூற்றிலும் உண்மையுள்ளது.

எனினும் கேணல் அனுருத்த ரத்வத்த இப்போதிலலாதது இனி எப்போது வரும். இப்போது நாடு போரில் உள்ளது. ஆகவே ராணுவம் எப்போதும் போர் ஆயததங்களிலேயே இருக்கவேண்டும் என்று கடுமையாக வேண்டிக்கொண்டார்.

இதனடிப்படையில் இராணுவத்தில் பல மாற்றங்களையும் ஏற்படுத்தினர். இந்நிலையில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் இடத்தை நிரப்ப மேஜர் ஜெனரல் தலுவத்தவினல்தான் முடியும் என்பது அநேக இராணுவத்தினரின் கருத்தாகவும் இருந்தது. அவருக்கு இப்போது பதவி உயர்வு வழங்கப்பட்டு செயலில் இறங்குமாறு பணிக்கப்பட்டிருப்பதாக அந்த பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -கே-சி

# கொழும்பில் பொலிஸார் தாக்கியதால் நல்லூர் யுவதி உயிரிழந்தார்

(கொழும்பு)

நல்லூரைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டு படையினரால் தாக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

கனடா செல்வதற்காக கொழும்பு வந்த இவர் படையினரின் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டார்: இவரைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிசார் அங்கு வைத்து இவரை சித்திரவதை செய்ததுடன் பலமாக தாக்கியுள்ளனர். இதனுல் அவர் அங்கேயே உயிரிழந்தார்.

இதையடுத்து பொலிசார் சயனைட் அருந்தி இப்பெண் தற்கொலை செய்துகொண்டதாக கூறி கொழும்பு ஆஸ்பததிரியில் சடலததை ஒப்படைத்துள்ளனர்.

கொழும்பில் கைதுசெய்யப்படும் பெண்கள் பொலிஸ் நிலையங்களிலும் தடுப்புக் காவலிலும் வைத்து படையினரால் இம்சிக்கப்பட்டுவருவதுடன் பல நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது குறித்து பல புகார்கள் தெரிவிக்கப்பட்டபோதும் அரசுஇதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவி லை

அண்மைக் காலமாக இடம்பெற்ற சுற்றி வளைப்புக்களின் போது ஆயிரத்திறகும மேற்பட்ட இளம் பெண்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

மலேசியா ஆஸ்பத்திரியில்

# பாலபத்தபெண்டியின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

மலேசியாவில் ஆஸ்பத்திரி ஒன்றில் இருதய நோய்க்காக சகிச்சைபெற்றுவரும் ஜனுதிபதியின் செயலர் திரு. பாலபெத்தபென்டியின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

இவர் சிகிச்சை பெற்றுவரும் ஆஸ்பத்திரிக்கு சென்ற தமிழ் பெண் ஒருவரின் நடமாட்டத்தில் எழுந்த சந்தேகத்தையடுத்தே இவரதுபாதுகாப்பை அதிகரிக்குமாறு இலங்கைஅரசு மலேசிய அரசைகேட்டுள்ளது.

இந்த தமிழ் பெண்ணிடம் ஆஸ்பத்திரிக்குவந்த காரணம் பற்றி வினவப்பட்டபோது அவர், தான் தலைமயிரை காயப்பண்ணும் ஒருவரை ந தேடி வந்ததாக கூறினுராம். -சி

அரசு — விடுதலைப் புலிகளுக்கிடையில்

# மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வே பிரதமர் உதவவேண்டும்

(ஒஸ்லோ)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக மத்தியஸ்தம் வகிக்குமாறு நோர்வேயில் உள்ள இலங்கைக்கான அனைத்து கட்சி ஒற்றுமை அமைப்பு நோர்வே பிரதமர் திரு. கரோகார்லம் புரூன்ட்லான்ட்டை கோரியுள்ளது.

இதுபற்றி அந்த அமைப்பின் பேச்சாளர் திரு. ஹரோல்ட் ஹம்லெசர் கூறுகையில்: 1980 ல் இருந்து தமது அமைப்பு இலங்கையில் சமாதானம் ஏற்படுத்த தூண்டிவருகிறது. தற்போதைய பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ள இருதரப்பிலும் எமக்கு அனுதாபமுள்ளது.

மீண்டும் இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகிருேம். மோதல் தவிர்ப்பு உடன்பாடு மீறப்பட்ட செயலானது ஒருதலைப் பட்சமானது என கூற நான் விரும்பவில்லை. மேலும் இந்நிலையில் இப்பிரச்னையில் ஆழ்ந்து செல்லவும் விரும்பவில்லை.

இந்தப் பிரச்னையால் தமிழர்கள் பெருமளவு இரத்தம் சிந்தியுள்ளனர். விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது. இதனுல் இரு தரப்பிற்கும் சர்வதேச அழுத்தம் கொடுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்திற்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் அல்லது அதி உயர் அரசியல்வாதி ஒருவர் சென்று மீண்டும் சமாதான பேச்சுக்கள் ஆரம்பிப்பது குறித்து கால அட்டவணைஒன்று தயாரிக்கவேண்டும் எனவும் கூறினுர். -சி

# பௌத்த தேரர் கொலை உள்வீட்டுச் சதியே!

(கொழும்பு)

திம்புலாகல இத்தலகம கிறீசிலாலங்கார தேரர் சுட்டுக் கொல்லப்பட்டதற்குக் காரணம் 'உள்வீட்டுசதியே' எனக் கூறப்படுவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

புலிகள் நினைத்திருந்தால் இவரை எப்போதோ தீர்த்துக்கட்டியிருக்கலாம். ஆனுல் இங்கு நடந்தது உள்வீட்டு சதியே எனக் கூறப்படுகிறது இவர் புலிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தார் எனவும் கடந்த காலங்களில் பேச்சுக்கள் அடிபட்டிருந்தன.

இக்கொலை தொடர்பாக தேசிய பந்தோபஸ்து அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் வெளியிட்ட செய்தியில் கூட புலிகளைப் பற்றி ஒரு வார்த்தையேனும் இல்லை.

இதனுல் இதன் பின்னணியில், ஒரு வயோதிப பௌத்த பிக்குவின் படுகொலையின் மூலம் இனக்கலவரத்தை தூண்ட முயலும் சமூக விரோதிகளை கண்டுபிடித்து நாட்டு மக்களின் முன் நிறுத்துவது அரசாங்கத்தின் இன்றைய முக்கிய கடமையாகும் என்றும் அப்பத்திரிகை கோரியுள்ளது. ர-சி

இராணுவ

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

ஆளணியை மாற்றுவதென்பது போர் தந்திரோபாயங்களையும் மாற்றுவதாக அமைகிறது.

ஏப்பிரல் 19ம் திகதி போர் நிறுத்த உடன்பாடு முறிவடைந்ததைத் தொடர்ந்து கிழக்கு பகுதி காடுகளிலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டி வடக்குக்கு அனுப்ப இராணுவம் திட்டமிட்டுள்ளது.

ஆனுல் கேணல் அனுருத்த ரத்வத்த இந்த திட்டததை யாழ்ப்பாண போர் நிலைமையினுல் நிராகரித்தனர். அதனைத் தொடர்ந்துபலசிரேஷ்ட ராணுவ அதிகாரிகள் பல இடங்களுக்கும். பல தரங்களுக்கும் மாற்றப்பட்டனர்

இந்த பாரிய மாற்றங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு எந்தவித தகுந்த காரணங்களையும் தெரிவிக்கவில்லை. போர் முனையில் நின்று சண்டையில் ஈடுபடும் இராணுவத்தினர்இந்த மாற்றஙகளினுல் பாதிப்புறுவதினுல் அவர்களின் மனநிலையை பாதிப்பதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கே-சி

நாடாளுமன்ற

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான எதுவாயினும் உடனடியாக பொலிசாருக்கு அறிவிக்குமாறு பல தொலைபேசி இலக்கங்களையும் அப்பகுதி மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை நாடாளுமன்ற கட்டிடத்திற்குள்ளும் வெளியேயும் என்றுமில்லாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு படையினர் அதி உயர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். -சி

# 'பிரபாவை நாடு கடத்துமாறு இந்தியா விரைவில் கோருமாம்

(புதுடில்லி

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோரும் வகையிலான நடவடிக்கையை இயன்றளவு மேற்கொள்வதற்கு இந்திய மத்திய அரசாங்க அதிகாரிகள் முன்வந்துள்ளதாகதெரியவருகிறது.

ராஜீவ் கொலை வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு முடிவடைந்ததும் மேற்படி விடயம் தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை தற்போது முன்னேற்றகரமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளபடியால் திரு. பிரபாகரன்மீது எந்த அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதை ருசுப்படுத்தும் ஆவணங்களை இலங்கைக்கு வழங்குவதில் தவறில்லை என்றும் புதுடில்லி வட்டாரங்கள் கருதுகின்றன.

இதேவேளை விடுதலைப்புலிகள் தலைவரை நாடு கடத்தும் விடயத்தில் இந்தியப் பிரதமர் கைக்கொள்ளும் 'நழுவல்' போக்கு ராஜீவ்காந்தியின் விதவை மனைவியான சோனியா காந்திக்கும், காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய அர்ஜுன் சிங், என். டி. திவாரிபோன்றவர்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

இதனையடுத்து ராஜீவ் காந்தி கொலை வழக்கு விடயம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கு மத்திய வர்த்தக இணையமைச்சர் பி. சிதம்பரத்தை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நியமித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது

காங்கிரஸ் கட்சியில் தூதுக்குழு ஒன்று திரு. பிரபாகரனை நாடுகடத்தும்விடயம்தொடர்பாக தம்மை சந்தித்து கலந்துரையாடியபோது இது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தின் முனைப்பை பிரதமர் நரசிம்மராவ் வெளியிட்டியிருந்தாராம்.

இலங்கையின் தற்போதைய நிலைப்பாடு இவ்விடயத்திற்கு

(5ம் பக்கம் பார்க்க)

என்னவளம் இங்கில்லை ஏன்இங்கு நிறைவில்லை
உணர்வோடு ஏர்பூட்டி உழவு செய்வோம் -
வாருங்கள்

### மெய்வல்லுனர் போட்டி

(உடுவில்)

கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய வாசிகசாலையின் கீழ் இயங்கும் கண்ணன் சிறுவர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

திரு. சி. கருணுநிதி தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொணடு உரையாற்றினுர்.

சிறப்பு விருந்தினராக கந்தரோடை உபதபால் அதிபர் திரு. ஆ. சி. கணேசவேல் கலந்துகொண்டார். -109

# போர்முனைச் செய்திகளை வெளியிட பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு

(கொழும்பு)

போர்முனைச் செய்திகளை வெளியிடுவதற்கு பத்திரிகைகளுக்கு அரசு பலத்த கட்டுப்பாடுகளை போடவுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

படையினருக்கு போரில் ஏற்படும் பின்னடைவுகளையும் படையினரின் இயலாத தன்மையையும் அரசின் பிழையான அணுகு முறைகளையும், புலிகளின் முன்னேற்றம் குறித்தும் கொழும்பு பத்திரிகைகள் வெளியிடும் தகவல்கள் அரசுக்கும் படையினருக்கும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது.

போர்குறித்த தகவல்களை பத்திரிகைகளுக்கு வழங்கக்கூடாதென படைத்தளபதிகளும், உயர் அதிகாரிகளும் எச்சரிக்கப்பட்டு வருகின்றபோதும் பத்திரிகைகள் பல செய்திகளை படை அதிகாரிகளிடமே பெற்று வெளியிட்டு வருகின்றன. இது அரசுக்கு பல்வேறு நெருக்கடிகளையும் ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில் அரசின் சமாதான முயற்சிக்கு சில பத்திரிகைகள் குழிபறிப்பாதாக கூறி ஜனாதிபதி சந்திரிகா பத்திரிகைகள் மீது பல அழுத்தங்களை போட முயன்று வருகிறார்.

இதனையடுத்தே நேற்றுமுன்தினம் இதுதொடர்பாக நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில்; போர் குறித்த செய்திகளை வெளியிடுவதில் தகவல் தொடர்பு சாதனங்கள் அதிக கவனத்துடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும்; தவறினால் பொறுப்புகளை தவறுதலாக பயன்படுத்தும் தகவல்துறையை சேர்ந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக போர் குறித்து பொறுப்பற்ற தகவல்களை வெளியிடுவோரை நாம் கொல்லவோ, விமானத்திலிருந்து தூக்கி எறியவோ மாட்டோம் என ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். -சி

# மட்டுநகரில் மூவருக்கு மின்கம்ப மரணதண்டனை

[கொழும்பு]

மட்டக்களப்பில் கடந்த வாரம் மூவருக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இரவு 55 வயதான ஒருவரின் சடலம துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மின்கம்பமொன்றில் கட்டப்பட்டிருந்தது.

ஒதேவேளை மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியிலும் வடக்குப் பகுதியிலும் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டநிலையில் மின்கம்பங்களில் கட்டப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. சி

# ஆயுதங்கள் வழங்க பிரிட்டன் மறுப்பு

[கொழும்பு]

இலங்கைக்கு இராணுவ தளபாடங்களை ஏற்றுமதி செய்ய பிரிட்டிஷ் அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மீண்டும் போர் ஆரம்பமானதை தொடர்ந்து இலங்கை அரசு பல நாடுகளிடம் இராணுவ தளபாட மற்றும் ஆயுதஉதவியைகோரியது. ஏனைய நாடுகளிடம் கோரியது போன்றே பிரிட்டனிடமும் கோரிக்கை விடுத்தது.

எனினும் இதற்கு ஆதரவு தெரிவித்த பிரிட்டன் வெறும் உதட்டளவிலேயே தனது ஆதரவைதெரிவித்துள்ளது. இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவதற்கான அனுமதியை அந்நாடு மறுத்துள்ளது. இது இலங்கைக்கு பெரும் தாக்கமாகவே அமைந்துள்ளது. -சி

# 10 இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் அநுராதபுரத்திற்கு வருகை

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு ஆலோசனை வழங்க கொழும்பு வந்த பத்து இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்கள் அனுராதபுரம் சென்றுள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது,

இதுபற்றி 'சண்டேலீடர்' மேலும் தெரிவிக்கையில்; ஆயுதங்கள், வெடிமருந்துகள், படையினரை ஏற்றி இறக்கும் வாகனங்கள், யுத்தமுனை வாகனங்கள், தரையிறங்கும் கலன்கள் ஆகியன ஐரோப்பிய நாடுகளிலும் தூரகிழக்கு நாடுகளிலுமிருந்து கொழும்புக்கு வரத் தொடங்கியுள்ளன.

வெடிமருந்துகள் விமானங்கள் மூலம் குறிப்பாக இஸ்ரேலிலிருந்து வந்துள்ளன. சீனாவிலிருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் கப்பல்களில் வந்து இறங்கியுள்ளன. இதேநேரம் இந்தியா பாக்குநீரிணையில் கடல்வலயத் தடையைப் போட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபடுகின்றது, இதன் மூலம் வெளிநாடுகளிலிருந்து புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதை தடைசெய்ய திட்டமிடபபட்டுள்ளது;

அமெரிக்கா இலங்கை விவகாரத்தில் அனுதாபமாகவே உள்ளது. அமெரிக்க அதிபர் பில்கிளிங்டனின் நெருங்கிய நண்பன் திரு. பீற்றர் புறுலிக்கை அனுப்பியுள்ளது, இவர் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைப் பிரிவின் தலைவருமாவார். எனினும் சில இராஜதந்திர வட்டாரங்கள் இதனை விரும்பவில்லையாம்! -சி

## பிரபாவை

(4-ம் பக்க தொடர்ச்சி)

சாதகமாக இருந்த போதிலும் இலங்கை ஜனாதிபதி திருமதிசந்திரிகா திரு. பிரபாகரனைபிடிக்கும் திட்டம் இல்லை என்பதனை இந்தியப் பிரதமருக்கு அண்மையில் தெரியப்படுத்தார்.

ஆனால் இலங்கை ஜனாதிபதியின தற்போதைய நிலைப்பாடு இந்திய அரசாங்கத்திற்கு சார்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## சரத்பவார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியில் ஒற்றுமையை நிலைநாட்ட உதவவேண்டுமென திருமதி சோனியா காந்தியிடம் சரத்பவார் கோரியுள்ளார்.

தனக்கென எந்தவித அதிகார பூர்வமான பதவியையும் சுயநலபோக்கையும் கொண்டிராத சோனியா காந்தியே காங்கிரஸின் இன்றைய பிளவை சரிசெய்து கட்சியில் ஐக்கியத்தை நிலைநாட்டக் கூடிய தலைவர்என சரத்பவார் கூறியுள்ளார்.

சரத்பவார்- சோனியா சந்திப்பு பிரதமர் நரசிம்மராவுக்கு மேலும் நெருக்கடிகளை கொடுக்கக்கூடுமென அவதானிகள் கூறுகின்றனர், எனினும் பிரதமர் ராவின் நெருங்கிய ஆதரவாளர்கள் திருமதி சோனியாவை ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்றும் கூறப்படுகிறது.' - சி

## வீரவணக்கம்

### வித்துடல் விதைப்பு நினைவுக்கல் நாட்டல்

[யாழ்ப்பாணம்)

கடந்த 26-ம் திகதி மன்னாரில் வீரச்சாவைத் தழுவிய வீரவேங்கை வித்தகி (சின்னராசா விமலாதேவி தொட்டிலடிச் சந்தி, சங்கானை) அவர்களின் திருவுருவப்படம் இன்று 30-ம் திகதி பி. ப. 2 00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டுத் தொட்டிலடி சனசமூக நிலையத்தில் மக்களின் 'இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு பி. ப. 2 30 மணியளவில் இறுதி வீர வணக்க கூட்டமும் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் நேற்று சுகவீனம் காரணமாகச் சாவினைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை இளங்குமரன் [இரத்தினம் சயந்தன் பொற்பதிவீதி' கொக்குவில் கிழக்கு] அவர்களது இல

[6ம் பக்கம் பார்க்க]

## புலிகளின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து வாங்கியுள்ளனர்.

பிரான்ஸிலிருந்து இந்த விமானங்கள் விளையாட்டு நிறுவனம் ஒன்றின்மூலம் புலிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகள் 'மைக்ரோ லைற்' விமானங்களை அல்லது வேறு ரக விமானங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இலங்கையும், தெற்காசிய நாடுகளும் குறிப்பாக இந்தியாவும் பெரிதும் அக்கறை காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சி

# சர்வஜன வாக்கெடுப்பை கோருவோர் அரசியல் தீர்வை விரும்பவில்லை தொண்டா கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை பல அக்கிரமங்களுக்குப் பொறுப்பானவர் எனக் குற்றங் கூறியவர்களே, பின்பு மாறி மாறி அரசுப் பொறுப்பேற்றதும் அவருடன் இருந்து பேசுவதற்கு இணங்கியுள்ளனர். அவருடன்தான் இலங்கை அரசு பேச்சு நடத்த வேண்டுமென்பதனையே இது எடுதது் காட்டுகிறது. இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் 'சண்டே லீடருக்கு' வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: இந்தியாவில் நான் நின்றபோது சில கேள்விகள் கேட்கப்பட்டதற்கு என் மனநிலையில் எழுந்த உண்மைக் கருத்தை வெளியிட்டேன். திரு. பிரபாகரனை சீக்கிய தலைவருடன்- பகத்சிங்குடன் நான் ஒப்பிட்டு பேசியதை பெரிது படுத்துவதனை அவ்வளவு விரும்பவில்லை.

திருமதி சந்திரிகா குமாரதுங்க தமிழர்களுக்கு என்ன தீர்வை முன்வைக்கப் போகிறார் என்பதனை விரிவாக எனக்கு சொல்லவில்லை. ஆனால் வடக்கு கிழக்கு மக்களுக்கு கொடுக்கவுள்ளதை மேலோட்டமாக கூறியுள்ளளார்.

நாங்கள் இம்முறை ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. ஜனாதிபதி என்ன தீர்வை முன்வைக்கவுள்ளார் என்பதனை அறியவுள்ளோம். ஆனால் தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் பொதுமக்கள் பாதிப்படையக் கூடாதென்பதனை அவருக்கு வலியுறுத்தியுள்ளோம்.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த தமிழ் குழுக்களிடமும் ஜனாதிபதி தனது திட்டங்களை வெளிப்படுத்தவில்லை. ஆனால் வடக்கு- கிழக்கு இணைப்பு விடயத்தில் இந்த குழுக்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தன.

புதிய திட்டத்தில் வடக்கையும் கிழக்கையும் ஒரே அலகாக எடுப்பதென்பதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்படும், இதற்கு முஸ்லிம்கள் பிரச்னையாக இருக்கலாம். எனினும் எந்த ஒப்பந்தங்கள் செய்தாலும் செயற்படுத்தும் விடங்களிலேயே அது தங்கியுள்ளது

இனப்பிரச்னை விடயத்தில் எனது கொள்கை தெளிவானது.

வடக்கு கிழக்கு மக்களின் அபிலாஷைகளை தெளிவுபடுத்துவதாக அதிகார பரவலாக்கல் அமைய வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்புக்கு வாக்கெடுப்பு நடத்தக் கூடாது. இணைப்புக்கு வாக்கெடுப்பு நடத்த விரும்புவோர் அரசியல் தீர்வை விரும்பவில்லை. போரை நீடிக்க விரும்புவோர் ஒவ்வொரு மழுப்பல் காரணங்களை கூறுவர், ஜனாதிபதிக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வை காண்பதே விருப்பம். அதை அடைய அவருக்கு தகுதியும் உண்டு. எனினும் முன்னைய அரசுத்தலைவர்கள் போன வழியில் இவரும் விழுந்துவிடக் கூடாதென்றபயம் எனக்கு தற்போதுஉண்டு என்றார். கே-சி

# படையினருக்கு தலைமைதாங்க சிறந்தவர் இல்லை; சந்திரிகா கவலை

## மேலதிக பாதுகாப்புச் செயலர் நியமனம்

[கொழும்பு]

படையினருக்கு தலைமை தாங்கக்கூடிய ஆள் ஒருவர் இல்லாமல் ஜனாதிபதி சந்திரிகா திக்குமுக்காடுவதாக 'சண்டே ஐலன்ட்' தெரிவித்துள்ளது,

இதறகு பொருத்தமானவரை தற்போது ஜனாதிபதி சந்திரிகா தேடிக்கொண்டிருக்கிறார். கடந்த வாரம் முன்னாள் கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் பசில் குணசேகரா மேலதிக பாதுகாப்பு செயலாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக திரு. சந்திரானந்த டி சில்வா உள்ளபோதும் அவரது நியமனம் குறித்து பலத்த அதிருப்தி நிலவுவதும் குறிப்பிடத் தக்கது.

ரியர் அட்மிரல் குணசேகரா 1973 ல் கடற்படைத் தளபதியாக அப்போதைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால்நியமிக்கப்பட்டவர். இவர் 1979 வரை கடற்படைத் தளபதியாக இருந்தார். பொ. ச. மு. அரசின் தீவிர ஆதரவாளரான இவர் திருமதி ஸ்ரீமாவினதும் ஆதரவாளராவார். இவர் யானை மார்க் தீப்பெட்டித் தொழிற்சாலையிலும் பணியாற்றிருந்தார் இவர் கடந்த தேர்தலில் பொ. ச. மு. வுக்காக தேர்தல் பிரசாரங்களிலும் ஈடுபட்டிருந்தார்.

இவரது நியமனம் படையினராலும் வரவேற்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சி

# 11 நாடுகளிலிருந்து ஆயுதங்கள் அடுத்த வருடமே வந்து சேரும்

[கொழும்பு]

அரச படையினருக்காக வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பெருமளவு ஆயுதங்கள் அடுத்தவருட முற்பகுதியிலேயே இலங்கைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதாக சண்டே ஐலன்ட் தெரிவித்துள்ளது.

இராணுவ நிபுணர்கள்குழுக்கள் அண்மையில், ரஷ்யா, சீனா பிரிட்டன், சிங்கப்பூர், சேர்பியா, நெதர்லாந்து, செக்குடியரசு, உக்ரேன், இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு சென்று திரும்பியுள்ளன. சில குழுக்கள் இன்னும் நாடுதிரும்பவில்லை.

இந்நிலையில் புதிய விமானங்கள், டாங்கிகள் யுத்தக்கப்பல்கள், ஆகஸ்ட்மாதமுற்பகுதிக்குமுன் இலங்கை வந்து சேரமாட்டாதென தெரிவிக்கப்படுகிறது, இதேவேளைபெருமளவு இராணுவ தளபாடங்கள் இவ்வருட இறுதிக்குள் வந்துசேராதெனவும் தெரிவிக்கப்படுகிறது

இதற்கிடையில் அவசரதேவைக்காக இஸ்ரேல் சீனாவிலிருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் கொழும்பு வந்த சேர்ந்துள்ளன. இவை தற்போது யுத்தமுனைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. சி

## இன்று

(பண்டத்தரிப்பு)

யாழ் மாநகர சபை சுகாதார பகுதியினரால நாவந்துறை புனித நீக்கிலஸ் சன சமூகநிலையத்தில் சுகாதார கருத்தரங்கு ஒன்று இன்று30-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல்நடைபெறவுள்ளது. 75

# பிரிட்டனுக்குப் பயிற்சி பெறச் செல்ல யாழ். டாக்டர்களுக்கு 'விசா' மறுப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனு வைத்தியசாலையில் இருக்கும் எக்ஸ்ரே கதிர்ப் படக்கருவியை இயக்குவதற்கு, பிரிட்டன் சென்று பயிற்சி பெறுவதற்காக கொழும்பு சென்ற டாக்டர் குழுவுக்கு விசா வழங்குவதற்குக் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் மறுத்துள்ளது.

டாக்டர் குழுவினர் தமது கிராம சேவையாளர், பிரதேசச் செயலாளர் ஆகியோர் அத்தாட்சிப்படுத்திய கடிதங்களைப் பெற்றுவந்த பின்னரே விசா வழங்கப்படும் என்று பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து டாக்டர் குழுவினர், தமக்குப் பரதேசச் செயலர், கிராம சேவையாளர் ஆகியோரின் உறுதிப்படுத்திய கடிதங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளனர்.

ஜேர்மன் அரசாங்கத்தால் யாழ். போதனு வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த எக்ஸ்ரே கதிர்ப்படக் கருவியை இயக்குவதற்குத் தொழில்நுட்பவியலாளர்கள் இன்றி இயங்காமல் முடங்கிக் கிடப்பது குறிப்பிடத்தக்கது. 170 ரி

# திருகோணமலை கடற்பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல் நடமாட்டம்

## 'திவயின' தகவல்

[கொழும்பு]

திருகோணமலைக் கடற்கரைப் பகுதியில் நீர்மூழ்கிக் கப்பலின் நடமாட்டம் இருப்பதாகத் 'திவயின' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடற்படையினர் இரண்டு, மூன்று நாட்கள் இந்த நீர்மூழ்கிக் கப்பல் கடலின் மேற்பரப்பில் தெரிவதைக் கண்டுள்ளனர். அப்போது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, இந்த நீர்மூழ்கிக் கப்பல் நீரின் கீழ் சென்று மறைந்துள்ளது. 50 மீட்டர் தூரத்தில் கடலினுள் சென்றுகொண்டிருந்த நீர்மூழ்கி, பின்னா கடலின் மேற்பரப்பில் தென்பட்டது என்று 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது. ம ரி

# இந்திய சட்டங்களுக்கு இணங்க 'பிரபா' கைது அமையுமாம்

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை கைது செய்வது தொடர்பாக இந்திய சட்டங்களுக்கு இணங்க மத்திய அரசு நடவடிக்கைஎடுத்து வருகிறது என்று வெளியுறவுதுறை துணை அமைச்சர் ஆர்-எல் பாட்டியா கூறியுள்ளார்.

1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தடாசட்டத்தின் கீழ் திரு, பிரபாகரனுக்கு எதிரான கைது வாரண்டுகளை ராஜீவ் கொலை வழக்கை விசாரித்து வரும் தனி நீதிமன்றம் பிறப்பித்ததை அமைச்சர் நேற்று மக்கள் அவையில் கேள்வி ஒன்றிற்கு பதில்அளிக்கையில் சுட்டிக்காட்டினுர்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு திரு. பிரபாகரனை கொண்டுவரும் நடவடிக்கையின் அனைத்து அம்சங்கள் குறித்தும் மத்திய அரசில் சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடன் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் கூறினுர்.

ராஜீவ்காந்தியின்கொலைக்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று இலங்கை ஜனுதிபதி இந்திய செய்தி பத்திரிகை ஒன்றிற்கு கூறியதாக வெளிவந்துள்ள பேட்டி பற்றி அரசு அறியும் என்றும் இலங்கை அரசுத் தலைவர் ஒருவர் இவ்வாறு கூறியதாக வெளிவந்திருப்பது இதுவே முதல் தடவை என்றும் திரு. பாட்டியா கூறினுர். கே-ரி

# கொழும்பு பத்திரிகைகளுக்கு தணிக்கைமுறை அமுலாகலாம்

(கொழும்பு)

சிறிலங்கா ராணுவ இழப்புக்கள் தோல்விகள் பற்றிய செய்திகளை வெளியிடும் கொழும்பு பத்திரிகைகள் தம் மீது அரசாங்கம் கடும் கட்டுப்பட்டையும் தணிக்கை முறைகளையும் விதிக்கலாம் என எதிர்பார்க்கின்றன.

கடந்த 28ம் திகதி ஹிரு சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இடம் பெறும் பகுதி வெறுமனே கறுப்புமை மட்டும் பூசப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

சிறிலங்கா அரசின் பத்திரிகைச் சுதந்திரத்தை மீறும் செயலை வெளிக்காட்டுவதாக இது அமைந்துள்ளது.

### ஆலய தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கன் ஆலயம் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஷெல் தாக்குதல்களைக் கண்டித்தும் இதுவரை இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்ட ஆயிரக்கணககான இந்துக்கோவில்களைத்திருத்தவோ அல்லது நட்டஈடு வழங்கவோ தவறிய அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்தும் வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கேதீஸ்வரம்', மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், உகந்தை முருகன் கோவில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ள இராணுவ முகாம்களை உடன் அகற்றி அவ் ஆலயங்களை இந்துக்களின் வழிபாட்டிற்குத் திறந்துவிடுமாறு அரசாங்கத்தைக் கோரியும் இந்துக்களின் புனித தீர்த்தமான கீரிமலையில இந்துக்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்குமாறு அரசாங்கத்தைக் கோரியும், இந்துக்களின் புனிதத் தலங்கள் மீதான தாக்குதல்கள், அரசின் அடக்குமுறைகள் ஆகியவை சம்பந்தமான இந்துக்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் முறையிலும் மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கையொன்றை நடாத்த இந்துசமயப் பேரவை தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டமொன்று யூன் மாதம் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இந்து சமயப் பேரவைக் காப்பாளர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது. ரி

### இலங்கைக்கு!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனுதிபதி திருமதி சந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்காவின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்கா இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க உத்தேசம் கொண்டுள்ளதாக அமெரிக்காவின் பிரபல பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதாக 'வெரித்தாஸ், நேற்று தெரிவித்தது.

இதேவேளை விடுதலைப் புலிகளை முறியடிக்க அமெரிக்கா உதவுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசியபணியகதலைவி ரொபின் ராபேல் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வாஷிங்டனில் வைத்து மேலும் தெரிவிக்கையில்:

விடுதலைப் புலிகள் தொடர்பான தொடர்சியான பயங்கரவாதத்தை முறியடிக்க ஆயுதங்கள் தவிர்ந்த சில பொருளுதவிகளை அமெரிக்கா வழங்கும் இராணுவ துருப்புகளை ஏற்றி இறக்குவதற்கு விமானங்களை வழங்கவும் அமெரிக்கா தயாராயுள்ளது எனவும் குறிப்பிட்டார். வி-சி-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.

## ● பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சி நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில், வல்வெட்டித்துறை ஊரிக்காட்டை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்த இந்த ஷெல்களினுல், ஒரு தண்ணீர்த் தாங்கி உட்பட நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன. 90 ரி

## விறகு எடுக்க சென்ற இருவர் இராணுவத்திடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியிலிருந்து கௌதாரி முனைக்கு விறகு எடுக்கச் சென்ற இருவர் பூநகரி இராணுவத்திடம் சிக்கிக் கொண்டனர்.

கௌதாரி முனையிலிருந்து இடம் பெயர்ந்து அரியாலையில் தற்போது வசித்து வரும் பூதத்தம்பி நாகராசா (வயது 50], கணேஸ் கனகராசா [வயது 46], சுப்பையா திரு நாவுக்கரசு (வயது 40) ஆகியோரே விறகு எடுக்கச் சென்றபோது இராணுவத்திடம் சிக்கிக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இவர்களுடன் விறகு எடுக்கச் சென்று தப்பி வந்த ஒருவர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார். 162-வி-ரி

## லிங்கநகர் தமிழர்களை வெளியேற்ற வேண்டாம்

### ஆளுநர் கடிதம்

[கொழும்பு)

திருமலை லிங்க நகரில் தமிழ் மககள் வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி வட கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா பாதுகாப்பு அமைச்சரின் செயலரிற்கு அவசர கடிதம ஒன்றைஅனுப்பியதாக தெரிய வருகிறது.

இதேவேளையில் திருமலை லிங்க நகர் சிங்கள குடியேற்றத்தை திட்டமிட்டரீதியில மேற்கொள்ளுவதில் திருமலை அரசாங்க அதிபர் ஈடுபட்டு வருவதாகவும் புகார் தெரிவிககப்படுகிறது. க-ரி

## மதில் விழுந்து பெண் காயம்

]யாழ்ப்பாணம்]

பழைய மதில் ஒன்று இடிந்து விழுந்தபோது அதன் இடிபாடுகளுக்கிடையில் அகப்பட்டு இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

வல்வெட்டித்துறை ஊரிக்காடு என்ற இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊரிக்காட்டைச்சேர்ந்த வடிவேல் சாந்தி (27 வயது) என்வபபடுகாயமடைந்தவராவர் 90-ரி

### வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

[கொழும்பு]

ரயில் நிலைய அதிபர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரயில் நிலைய அதிபர்களின் வேலைநிறுத்தம் நேற்றுக் கைவிடப்பட்டது.

மேற்படி வேலைநிறுத்தத்தினுல், நேற்றுக் காரியாலயஙகளுக்குச் செல்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும், கொழும்பு கோட்டை, மருதானை ரயில் நிலையங்கள் முற்ருகச் செயலிழந்து காணப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி ரி

### வீர வணக்கம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லத்தையடைந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் அவரது வித்துடலையும கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்திற்கு எடுத்துச் சென்று அங்கும் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைத்து இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் திருவுருவப்படமும் வித்துடலும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் வீரவேங்கை வித்தகியின் நினைவுக்கல்லை நாட்டியும். வீரவேஙகை இளங்குமரனின் வித்துடல் புனித விதை குழியில் விதைக்கவும்படும். ரி

### வெள்ளவத்தையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியோடிய நபர்களை தேடி பொலிசார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். க ரி

### வடக்கு-கிழக்குப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக சிந்தித்துவருதுடன் போருக்குததேவையான ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையிலும் மிகத்தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஏவுகணை எதிர்ப்பு விமானங்களைக் கொள்வனவு செய்வதிலும் அரசு அதிக அக்கறையுடன் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் படையினரின் உயர் மட்டத்தில் பல மாற்றஙகள் செய்யப்பட்டு, படைகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவை யாவும் பூர்த்தியான பின்னர், அரசு பெரும் தாக்குதல் ஒன்றை யுத்தத்திற்காக நடத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ரி

### பேச்சுக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைவரும் திரு. பிரேமன்ஷான் இலங்கையில் மூன்று நாட்கள் தங்கியிருந்து அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஏற்படுத்துவதற்கான கனேடிய அரசின் திட்டங்களை விரிவாக எடுத்துரைப்பார்.

திரு, பிரேமன்ஷான் பிரதமர் ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து சமாதானத்துக்கான கனடாவின் திட்டத்தை விரிவாக எடுத்துக் கூறுவார் என்றும் கொழும்பிலுள்ள கனடாவின் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (வி-ரி)